RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s311

# "சூல்" புதினத்தின் வழி பண்பாட்டுமாற்றங்கள்

இரா. மாரிமுத்து [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஆனந்தா கல்லூரி (அழகப்பா பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), தேவகோட்டை, சிவகங்கை-630303, தமிழ்நாடு, இந்தியா.

# Cultural Changes Routed Through the Novel 'Sool'

**R. Marimuthu** [a, *]

[a] Department of Tamil, Ananda College (Affliated to Alagappa University) Devakottai, Sivagangai-630303, Tamil Nadu, India

* Corresponding Author: rsmuthu1984@gmail.com

Received: 09-04-2021
Revised: 29-04-2022
Accepted: 03-05-2022
Published: 15-07-2022

Check for updates

## ABSTRACT

In the thirteenth century, Italian artists published a series of stories called novellas. It was the extension of this that later gave rise to the tradition of telling stories through prose. Culture refers to the spheres of human activity and the symbolic systems that give special characteristics and significance to such activities. Cultures are divided into two types. One can be classified as a culture based on internal/domestic life and the other based on social/ political life. Marriage is a socio-legal relationship system. There is no tradition of marrying a girl who has been raised since childhood. There are probably no poets who have not sung about children since the Sangam period. It is a Tamil tradition to plough and produce rice and make food. The 'Sool' novel has also stated the practise of giving food without paying wages if rice is pounded. It also shows how to prepare the soil before plowing. Scatter clods of litter and top it with mullein, then summer ploughing. The land will be fertile as a bride. News about ploughing as rain water accumulates and the soil is happy and mixed with manure and ready for sowing can be seen. Once upon a time, the community appointed someone for water protection, and through them they have been protecting water. At that time, there was no name for the watering device (Neer Paaichi). They call it the "sluice control" (Madai Kudumban). From generation to generation, Madai Kudumban and Kattak Karuppan have been maintaining the sluice and distributing water. The high dignity of not giving food for money can also be seen. Thus, the best practises of society in the past are not in practise today. In this way, the aim of this article is to investigate the cultural changes through the Sahitya Akademi award-winning novel "Sool" by Karisal region writer Cho. Dharman.

**Keywords:** Cho. Dharman, Sahitya Akademi Award, Neer Paaichi, Sool

## முன்னுரை

படைப்பிலக்கிய வகையுள் கதைக் கூறும் இலக்கிய வகையைச் சார்ந்தது புதின இலக்கியம். அதிகமான நிகழ்வுகளையும் பாத்திரங்களையும் கொண்டு ஒரு பெருங்கதையைக்கூறும் இலக்கியமாகவும் புதினம் விளங்குகிறது. இந்த இலக்கியத்தைக் கதை இலக்கியம் என்றே கூறலாம். பழங்காலக் கதை இலக்கியங்கள் பெரும்பாலும் கவிதை வடிவிலேயே தோன்றின. இராமயணம் மகாபாரதம் போன்ற கதைக்கூறும் இதிகாசங்கள் கவிதை வடிவில் தோன்றியவை. சங்ககாலத்தை அடுத்தும் இடைக்காலத்திலும் தமிழில் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி,

கம்பராமயணம், பெரியபுராணம் போன்ற கதைக்கூறும் இலக்கியங்கள் கவிதை வடிவ இலக்கியங்களேயாகும்.

பிற்காலத்தில் அச்சு எந்திரங்கள் அறிமுகமான சூழலில் உரைநடை வடிவில் பெருங்கதைகள் எழுதும் நிலை ஏற்பட்டது. இடைக்காலத்தில் ஐரோப்பாவில் வீரர்களின் வீரதீரச் செயல்களையும் அவர்களின் காதல்களையும் கூறும் கதைகள் எழுதப்பட்டது. 13ம் நூற்றாண்டுகளில் இத்தாலிக் கலைஞர்கள் நூவேல் என்னும் பெயர் கொண்ட பலக்கதைக் கொத்துகளை வெளியிட்டனர். இதன் நீட்சியே பிற்காலத்தில் உரைநடையின் வாயிலாகக் கதைக்கூறும் மரபு ஏற்பட்டது இதுவே புதினம் என்னும் புதிய இலக்கியவகைத் தோன்றப் பின்புலமாக அமைந்தது. அவ்வகையில் கரிசல் வட்டார எழுத்தாளரான சோ. தர்மனின் சாகித்ய அகாடமி விருது பெற்ற “சூல்” புதினத்தின் வழி பண்பாட்டு மாற்றங்கள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்காக அமைகிறது.

## பண்பாடு பொருள்

“பண்பாடு என்பதற்கு கலாச்சாரம் என்பது மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயல்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவம் கொடுக்கும் குறியீட்டு அமைப்புகளையும் குறிக்கின்றது என அல்பிரட் எல் குறோபெர் விளக்கம் தருவார்” (Alfred Kroeber, 1952). பண்பாடுகளை இரு வகையாகபிரிப்பா. ஒன்று அகம் சார்ந்த பண்பாடு மற்றொன்று புறம் சார்ந்த பண்பாடு என வகைப்படுத்தலாம்.

## அகம் சார்ந்தப்பண்பாடுகள்

சூல் புதினத்தில் இரு வகைப் பண்பாடுகளைக் காண முடியும். ஒன்று அகம் மற்றொன்று புறம் சார்ந்தது. அகம் சார்ந்தது இல்லறத்தோடு, தொடர்புடைய திருமணம் சடங்கு உணவு போன்றவற்றோடு தொடர்புடையவை அகம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் எனலாம்.

## திருமணம்

திருமணம் என்பது ஒரு சமூகச் சட்ட உறவு முறை அமைப்பு ஆகும். ஒரு பெண்ணும் ஒரு ஆணும் இல்லறம் மேற்கொள்ள நடத்தபெறும் ஒரு வாழ்கை ஒப்பந்தம். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கற்பு பற்றி பேசுகிறார். அகநானூற்றில் 86 வது பாடல் திருமணம் பற்றி பேசுகிறது. சிலம்பில் புகார்க காண்டத்தில் மங்கல வாழ்த்துக்காதையில் திருமண நிகழ்வை இளங்கோ விளக்குகிறார். ஆக திருமணம் காலம் காலமாக தமிழ் இலக்கியங்களில் பேசப்படுகிறது. புதினப்படைப்படைப்பாளர்கள் சமகாலத்தில் நடைபெறும் பண்பாட்டு மாற்றங்களைப் பதிவு செய்வர். “செவனி நான் தொட்டு தூக்கி விளையாட்டுக்காட்டி வளர்த்த கொழந்தைய தொட்டு தாலிகட்டி பொண்டாட்டியாக்கிக்கோ அப்படினா எப்படி முடியும். ஒறவு முறையில் மாமன் மகளா இருந்தாலும் அவ எனக்கு தங்கச்சிதானே” என்ற இடத்தில் முறை பெண்ணாக இருந்தாலும் சிறுவயது முதல் தூக்கி வளர்த்த பெண் என்பதால் அவளை தங்கையாக எண்ணும் மனித மாண்பையும் சிறந்த பண்பாட்டுக் கூறுகளையும் எண்ணிப் பார்க்க முடிகிறது (Dharman, 2016).

## குழந்தைப் பேறு

சங்ககாலம் தொட்டு இன்று வரை குழந்தை களைப் பாடாத புலவர்கள் இல்லை எனலாம். புறநானூற்றில் குறு குறு நடந்து சிறுகை நீட்டி என்ற அறிவுடைநம்பி பாடல் வரிகள் குழந்தைச் செல்வத்தைச் சுட்டிக்காட்டுகிறது (Balasubramanian, 2004). சமூகத்தில் ஒரு காலத்தில் காணப்படும் பண்பாடுகள் வழக்கிழந்து வருகின்றது. சூரிய பகவானைக் கும்பிட்ட மணமக்கள் கிணற்றுத் தண்ணீருக்குள் வெற்றிலையை வீசி எறிய குப்புற ஒன்பது வெத்திலையும் மல்லாக்க ஏழு வெத்தலையும் தண்ணீரில் மிதக்கின்றன. ஒன்பது பொம்பளப்புள்ள. ஏழு ஆம்பளப்புள்ள. சம்சாரி

கொப்புக் கொழையாம இருக்கணும்னா ஆணும் பெண்ணும் வேணும் என்னும் இவ்விடத்தில் குழந்தைப் பேறுக்காக செய்யும் சடங்கு முறையும் குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சமம் என்ற பண்பாட்டைக் காண முடிகின்றது (Dharman, 2016). மாறாக இன்று இவ்விதமான பண்பாடைக் காண முடியவில்லை.

## புறம் சார்ந்தப் பண்பாடுகள்

இல்லறத்திற்கு வெளியே உள்ள மக்கள் பழக்க வழக்கங்களை புறம் சார்ந்தது எனலாம். அவ்வகையில் சூல் புதினத்தில் எண்ணற்ற புறம் சார்ந்த பண்பாடுகள் காணக்கிடைக்கின்றன.

## நெல்குத்துதல்

உழவு செய்து நெல்விளைவித்தல் அதனை உணவாக்குவது தமிழர் பண்பாடு. சூல் புதினத்தில் நெல் குத்தினால் கூலிகொடுக்காமல் உணவு கொடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதனைப் புறநானூறு "உண்டிக்கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்றும் மணிமேகலைக் காப்பியம் "உண்டியும் உடையும் கொடுத்தோன் உயிர் கொடுத்தேனே" என பசித்த வயிற்றுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்ற மனித மாண்பை எடுத்துக்காட்டுகிறது. "இந்த ஆளா சின்னய்யா? இது ராவுத்தன் பட்டியிலிருந்து சம்பளத்துக்கு கூட்டியாந்தன் சின்னய்யா. ஒருமரக்கா நெல்லை குத்தி அரிசியக்கி குடுத்திட்டா ஒரு நேரத்துக்கு கஞ்சி ஊத்திறனும் அது தான் கூலி" என்ற புதினத்தின் வரிகள் பசியோடு சமூகத்தில் வாழக்கூடாது என்ற தமிழர் பண்பாட்டை பறைசாற்றுகிறது (Dharman, 2016).

## உழவு

சங்க இலக்கிய திணைப்பாகு பாட்டில் உழவைப் பற்றி மருதத்திணை விரிவாகச் செய்தித் தருகிறது. வான்சிறப்பில் வள்ளுவர் உழவின் மேன்மையை

"ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்

வாரி வளங்குன்றிக் கால்

ஏன உழவின் சிறப்பைப் பேசுகிறார் (Parimelalhagar, 2002). இதனை அரண் செய்யும் வண்ணம் சூல் புதினம் உழவுக்கு முன் மண்ணை எவ்வாறு பக்குவப்படுத்த வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. குப்பை குமிகளைச் சிதறி அதன் மேல் கரம்பை மண்ணை சிதறி அப்புறம் கோடை உழவு. நிலம் மணப்பெண்ணாய் கனிந்து கிடக்கும். முழை நீர் தேங்க மண் மகிழ்ந்து உரம் கலந்து விதைப்பிற்கு தயராய் நிற்கும்." என விதைப்பதற்கு முன் செய்யும் உழவுப்பணியைக் காணமுடிகிறது. இன்று இந்த உழவு முறைகளைக் காணமுடியவில்லை (Dharman, 2016).

## நீர்பாய்ச்சி

நீர் மேலாண்மைச்; சங்க காலம் தொட்டு வழக்கில் இருந்தது எனலாம். அவர்களை சங்க இலக்கியம் 'மடையர்கள்' என அழைக்கிறது. சங்க நூல்கள் நீர் நிலைகளை,

"அய வெள்ளாம்பல் அம்பகை"

என்ற வரிகள் "அயம் வன்பரற் அரல் படுகிய"

என நீர் நிலைகளை அரல் எனவும் சங்க இலக்கியங்கள் சுட்டியுள்ளது (Balasubramanian, 2004).

ஒரு கால சமூகம் நீர்ப்பாது காப்பிற்கென ஒருவரை நியமித்து அவர்கள் மூலம் நீர்பாதுகாப்பு செய்துள்ளனர். "அந்தகாலத்தில் நீர்பாய்ச்சி என்ற பெயர் கிடையாது. மடைக்குடும்பன் என்று தான் சொல்லுவார்கள். மடைக்குடும்பன் கட்டக் கருப்பன் பரம்பரை பரம்பரையாய் மடையைப் பராமரித்து நீர்

பங்கீடு செய்து வருடம் கூலி வாங்கி கண்மயைக் காவல் காத்துவரும் வாரிசு” என கண்மயைக் காவல் காத்து நீர் பங்கீட்டு ஒற்றுமையாய் வாழ்ந்த சிறந்தப் பண்பாட்டைக் காணமுடிகின்றன (Dharman, 2016).

## பண்டமாற்றம்

பண்ட மாற்றம் முறை சங்க காலம் தொட்டு புழக்கத்தில் இருந்துதது எனலாம். அப்பண்பாட்டுப் பதிவுகளை இலக்கியப்படைப்பாளர்கள் பதிவு செய்ய தவறியதில்லை. “உருளைக்குடியில் எந்தநேரம் போய்க் கேட்டாலும் பாலும் மோரும் தயிரும் ஓசியில் கிடைக்கும் வீடு கொப்புளாய்யின் வீடு தான் பண்டங்கள் வேண்டுமானால் மாற்றிக்கொள்ளலாமே ஒழிய எந்தப் பொருளையும் விலைபேசாத காலம்என்ற வரிகள் உணவை மாற்றிக்கொள்ளுதல் மற்றும் விலையில்லாமல் கொடுக்கும் மனித மாண்பு என்னும் பண்பாடு எண்ணத்தக்கது (Dharman, 2016).

## முடிவுரை

பண்பாடு என்பதற்கு கலாச்சாரம் (ஊஹரடவரசந) என்பது மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயல்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவம் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் குறிக்கின்றது. சூல் புதினத்தில் இரு வகைப் பண்பாடுகளைக் காண முடியும். முறை பெண்ணாக இருந்தாலும் சிறுவயது முதல் தூக்கி வளர்த்த பெண் என்பதால் அவளை தங்கையாக எண்ணும் மனித மாண்பையும் சிறந்த பண்பாட்டுக் கூறுகளையும் எண்ணிப் பார்க்க முடிகிறது. குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சமம் என்ற பண்பாட்டைக் காண முடிகிறது. மாறாக இன்று இவ்விதமான பண்பாடைக் காணமுடியவில்லை. பசியோடு சமூகத்தில் வாழக் கூடாது என்ற தமிழர் பண்பாட்டை பறைசாற்றுகிறது. சூல் புதினத்தில் எண்ணற்ற புறம் சார்ந்த பண்பாடுள் காணக்கிடக்கின்றன. நீர் தேங்கி மண் மகிழ்ந்து உரம் கலந்து விதைப்பிற்கு தயராய் நிற்கும். ஏன விதைப்பதறக்கு முன் செய்யும் உழவுப் பணியைக் காண முடிகிறது. கண்மாயைக் காவல் காத்து நீர் பங்கீட்டு ஒற்றுமையாய் வாழ்ந்த சிறந்தப் பண்பாட்டைக் காண முடிகின்றன. ஊணவை மாற்றிக் கொள்ளுதல் மற்றும் விலையில்லாமல் கொடுக்கும் மனித மாண்பு என்னும் பண்பாடு எண்ணத்தக்கது. ஏன ஒரு கால சமூகம் சிறந்த பண்பாட்டுக் கூறுகளை வகுத்துக் கொண்டு மனித மாண்போடு வாழ்த்திருக்கிறது என்பதை எண்ணி வியக்கதக்கது. தற்போது மேற்கண்ட பண்பாடுகள் மாற்றமடைந்திருக்கிறது என்பது எண்ணத்தக்கது.

## References

Alfred Kroeber, (1952) Panpadu Enpatharkku Kalasaaram, Adaiyalam Press, Chennai, India.

Balasubramanian, K.V., (2004) Purananooru, New Century Book House, Chennai, India.

Dharman, Cho., (2016) Sool, Adaiyalam Press, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License